
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1174

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

167

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...



# மகளிர் உரிமைத்தொகை சிறப்பு நிதி!

# மீண்டும் ஆளட்டும், மக்கள் முதலமைச்சர்!

வறுமைக்கோடு என்பது மற்ற நாடுகளில் பொருளாதார அடிப்படையில் கணக்கிடப்படும். ஆனால், இந்தியாவில் மட்டும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சமூகரீதியாகவும் பின்தங்கியவர்களாக உள்ளனர். எனவே, இந்தியாவின் வறுமைக்கோடு என்பதை சமூகக் கோடாகப் பார்த்து திட்டங்களைத் தீட்ட வேண்டி உள்ளது. அதைத்தான் வலியுறுத்துகிறது சமூக நீதி அரசியல். அந்த அறவியல் பார்வையில், திராவிட மாடல் அரசு தீட்டிய திட்டம்தான் 'கலைஞர் மகளிர் உரிமைத்தொகை'.

2023-ஆம் ஆண்டு, 1.06 கோடி மகளிரைப் பயனாளிகளாகக் கொண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், பல்வேறு முகாம்கள் மூலம் பயனாளிகளின் எண்ணிக்கை 1.13 கோடியாக உயர்த்தப்பட்டது. சமீபத்தில், இந்த எண்ணிக்கை 1.31 கோடியாக உயர்ந்தது. இந்த 1.31 கோடி மகளிருக்கும் மாதம் ரூ.1,000 வீதம், மாதந்தோறும் 15-ஆம் தேதி, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்திவருகிறது தி.மு.க. அரசு.

### முதல்வர் தந்த இன்ப அதிர்ச்சி

இந்நிலையில், 2026 பிப்ரவரி 13-ஆம் தேதி, இந்த 1.31 கோடி மகளிருக்கும் இன்ப அதிர்ச்சி அளித்தார், நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான மகளிர் உரிமைத்தொகையுடன் கோடைகால சிறப்புத் தொகுப்பு என ரூ.2,000 சேர்த்து, ரூ.5,000 தொகை 1.31 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்கில் ஒரே தவணையாகச் செலுத்தியது தமிழ்நாடு அரசு. எவரும் எதிர்பாராத வகையில் அமைந்த இந்த அறிவிப்பு, மகளிர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இத்திட்டத்துக்கு, இந்த நிதியாண்டின் இறுதி துணை பட்ஜெட்டில் ரூ.3,913.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. அதைப் பயனாளிகளுக்குக் கொண்டுசேர்த்தார் நம் முதலமைச்சர்.

அந்த இன்ப அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள், மார்ச் 3-ஆம் தேதி மீண்டும் ஓர் அதிரடி அறிவிப்பாக, விளிம்புநிலையில் உள்ளவர்களுக்கு சிறப்பு நிதி வழங்கி, அரசின் மீதான நம்பிக்கையை உறுதி செய்தார் முதலமைச்சர்.




சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்து, அரசின் மாத ஓய்வூதிய உதவித் தொகை பெற்றுவரும் முதியோர்கள், கைம்பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர்கள், மாற்றுத் திறனாளிகள் வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில், அவர்களுக்கும் சிறப்பு நிதியினை மார்ச் 3 அன்று வழங்க உத்தரவிட்டார் நம் முதலமைச்சர்.

குறிப்பாக, அரசின் மாத ஓய்வூதியம் பெறுவோருக்கு, மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சிறப்பு நிதியாக ரூ.2000 சேர்த்து, வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் முதியோர்கள், கைம்பெண்கள் என மொத்தம் 29.29 லட்சம் பயனாளிகளுக்குத் தலா ரூ.3.200, 5.92 லட்சம் மாற்றுத்திறனாளிகளுக்குத் தலா ரூ.3,500, பராமரிப்பு உதவித்தொகை பெற்று வரும் 2.58 லட்சம் மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்குத் தலா ரூ.4,000 என மார்ச் 13-ஆம் தேதி அன்று அவர்களின் வங்கிக் கணக்கில் சென்று சேர்ந்தது.

அது மட்டுமின்றி, மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்துக்கு மீன்பிடித் தடை கால உதவித்தொகையாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.8,000 வீதம் ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 14,870 தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில், 15 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.2 ஆதார விலை என ரூ.8.53 கோடி நிதி வழங்கப்பட்டது.

### அரசு தந்துள்ள உறுதி!

மாதம் 1,000 ரூபாய் கிடைத்தால், தன் குழந்தையின் கல்விச் செலவுக்கு உதவும் என நினைக்கும் பெண்ணுக்கும், நடைபாதையில் வணிகம் செய்திடும் பெண்மணி, அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியும் பணிப்பெண்கள் என ஏழைக் குடும்பப் பெண்களின் வருமான அளவை அதிகரிப்பதும் - வறுமை விகிதத்தைக் குறைப்பதும்தான் இந்தத் திட்டங்களின் நோக்கம். அதுமட்டுமின்றி, விலை மதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து செலுத்திவரும் இல்லத்தரசிகளின் உரிமையாகவும் இந்தத் திட்டம் மாபெரும் வெற்றி பெற்றுள்ள நிலையில், தேர்தல் நடைமுறைகளால் அது இடையில் நின்றுவிடக் கூடாது என முன்னறிந்து, சிறப்பு நிதித் தொகுப்பை வழங்கினார் நம் முதலமைச்சர்.

- 1.31 கோடி மகளிருக்கு ரூ.5,000.
- 29.29 லட்சம் முதியோர் கைம்பெண்களுக்கு ரூ.3,200.
- 5.92 லட்சம் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3,500.
- பராமரிப்பு உதவித்தொகை பெற்று வரும் 2.58 மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களுக்கு ரூ.4,000.
- 1.62 லட்சம் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால உதவித்தொகை ரூ.8,000.
- 14,800 தேயிலை விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு, கிலோவுக்கு ரூ.2 ஆதார விலையாக ரூ.8.53கோடி.



நிதியை விடுவித்த அன்று அவர் வெளியிட்ட வீடியோவில், "தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த ஸ்டாலின் தந்த உறுதிமொழிதான் உரிமைத்தொகை. யார் தடை ஏற்படுத்தினாலும், அதிலிருந்து பின்வாங்க மாட்டேன். திராவிட மாடல் 2.0 ஆட்சியில் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையை, 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவோம். இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி. வெல்வோம் ஒன்றாக!" என உணர்வுபூர்வமாகக் குறிப்பிட்டார்.

> ஏழைக் குடும்பப் பெண்களின் வருமான அளவை அதிகரிப்பதும் - வறுமை விகிதத்தைக் குறைப்பதும்தான் இந்தத் திட்டங்களின் நோக்கம்.

சொல்லாததையும் செய்யும் கழக அரசு, சொன்னதைச் செய்யாமல் இருக்காது என்பதை தமிழ்நாட்டு மகளிர் அறிவர். அந்த நம்பிக்கையைத் தந்த முதலமைச்சராக, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தமிழ்நாட்டை மீண்டும் ஆளட்டும், மக்கள் மீளட்டும்!

**...சாதனை தொடரும்**

## முதலைக்கண்ணீர் வடிக்கிறது, பா.ஜ.க.!

தொகுதி மறுவரையறை என்ற பெயரில், தென்னக மக்களுக்கு இழைக்கப்படவிருந்த மாபெரும் அநீதியை எதிர்க்கட்சிகள் ஓரணியில் இணைந்து, நாடாளுமன்றத்தில் தவிடுபொடியாக்கியுள்ளன. ஆனால், எதிர்க்கட்சிகள் மகளிருக்கான 33% பிரதிநிதித்துவத்தைத் தடுத்துவிட்டதாகத் திரிக்கிறது, பாரதிய ஜனதா கட்சி. இது தொடர்பாகப் பதிவிட்டுள்ள ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி, "2023-ஆம் ஆண்டு, பெண்களுக்கு நாடாளுமன்ற/சட்டமன்றங்களில் இடஒதுக்கீடு வழங்கும் வகையில் கொண்டுவரப்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை அனைவரும் ஆதரித்து நிறைவேற்றினர். அந்த மசோதா தெரிவித்தது என்ன? '106-வது அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்யப்பட்ட பிறகு நடக்கும் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, நடக்கும் தொகுதி மறுவரையறையில், பெண்களுக்கான இடஒதுக்கீடு அமலாகும்' என்பதாகும். அதுவும் '15 ஆண்டுகளில் காலாவதியாகும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே எடுக்கப்பட்ட 2001 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படியும் 25 ஆண்டுகளுக்குத் தொகுதிகள் எண்ணிக்கை மாறாமல் எல்லைகளை மாற்றியமைத்தல் என்று 2001-இல் கொண்டுவரப்பட்ட 84-வது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில் உறுதியளித்தபடி, 2008-இல் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டன.

அப்போது, 2001-இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படியே தனித்தொகுதிகள் வரையறை செய்யப்பட்டன. அப்படியென்றால், 2023-இல் பெண்களுக்கும் இடஒதுக்கீடு என்ற மசோதாவினைத் தாக்கல் செய்யும்போதே, 2001 மக்கள்தொகை அடிப்படையில் பெண்களுக்கான இடங்களை உறுதி செய்திருக்கலாம். இல்லையேல், மக்கள்தொகை என்னவாக இருந்தாலும் குறைந்தபட்சமாகப் பெண்களுக்கு 3-இல் ஒரு பங்கு இடமளித்தல் என்ற கொள்கை முடிவை எடுத்திருக்கலாம். அப்படியல்லாமல், அதனை அடுத்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பு - அதற்கடுத்த தொகுதி மறுவரையறை என்று காலம் தள்ளியது ஏன்?

இவ்வாறு அடுத்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பையும் அதற்கடுத்த தொகுதி மறுவரையறையையும் பெண்கள் இடஒதுக்கீட்டில் முடிச்சுப் போட்டுவிட்டு, இப்போது தெற்கை வஞ்சிக்கும்படி தொகுதி மறுவரையறை செய்யாவிட்டால், பாசிச முழுவடிவை அடைய முடியாது என்ற அரசியல் காரணத்தை முன்னிட்டு, தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொண்டு வந்துவிட்டு, தோற்றபின் பெண்களுக்கு அநீதி என்று ஒன்றிய பி.ஜே.பி. இல்லாத இறப்புக்கு முதலைக் கண்ணீர் வடிக்கிறது" என்று கூறியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



எம்.இ.தேவநிதி



### இளைஞர் அணி அணிவகுப்புக்குப் பாராட்டு!

1991-ஆம் ஆண்டு, கழகத்தின் முப்பெரும் விழா பேரணியில், அணிவகுத்து வந்த எழும்பூர் பகுதி இளைஞர் அணி, சிறப்பான அணிவரிசை என முத்தமிழறிஞரிடமிருந்து இரண்டாம் பரிசு பெற்றது. அதற்கு உறுதுணையாக இருந்த செயல்வீரர்களுக்கு, 1992-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பட்டாளம் மணிக்கூண்டு அருகில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாராட்டுக் கேடயத்தை வழங்கினார், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள். தலைவருடன் நானும், எழும்பூர் இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த ரா.கலைவேந்தன் அவர்களும் உள்ளோம்.

**- எம்.இ.தேவநிதி,**
**தலைமைக் கழகப் பேச்சாளர், எழும்பூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நினைவுக்கு (ம் ல வு ரு க)

### அடிபணிந்த டெல்லி!

1952-ஆம் ஆண்டு, ரயில் நிலையப் பலகைகளில் இந்தி அழிப்புப் போராட்டத்தை அறிவித்த பெரியார், திருச்சி சந்திப்பில் ஒரு பக்கம் உள்ள பெயர்ப்பலகையில் இந்தி எழுத்துகளைத் தார் பூசி அழித்தார். மறுபக்கம் உள்ள பெயர்ப்பலகையை கலைஞர் தார் பூசி அழித்தார். இரண்டு கட்சிகள், ஒரே நோக்கம் எனப் போராட்டம் தீவிரமடைந்தது. எதிர்ப்பைத் தாங்க முடியாமல், டெல்லி அடிபணிந்தது. இன்று ரயில் நிலைய பெயர்ப்பலகைகளில் முதலில் தமிழ் இடம்பெறுவதற்கு, திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் கண்ட போராட்டமே காரணமாகும்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900